அகத்திய நாயனார் வாகட வெண்பா

பதிப்பாளர்

பெ. சுரேஷ்குமார் எம்.ஏ.,

தமிழ் இலக்கியத்துறை

சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னை - 600 005.

2007

அகத்திய நாயனார்
வாகட வெண்பா

சுவடியியலும் பதிப்பியலும் பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
பெ. சுரேஷ்குமார் எம்.ஏ.,

நெறியாளர்
ய. மணிகண்டன்
விரிவுரையாளர்

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்லைக்கழகம்
சென்னை - 600 005.

மே - 2007

சுவடியியலும் பதிப்பியலும்
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

எண்:53010632

நெறியாளர் சான்றிதழ்

முனைவர் ய. மணிகண்டன்,
விரிவுரையாளர்,
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

"அகத்திய நாயனார் வாகட வெண்பா" எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காகப் பெ. சுரேஷ்குமார் அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்பித்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியால் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

(முனைவர் ய. மணிகண்டன்)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

பதிப்பாளர் உறுதிமொழி

பெ. சுரேஷ்குமார்,
முதுகலை இரண்டாம் ஆண்டு,
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

'சுவடியியலும் பதிப்பியலும்' என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **"அகத்திய நாயனார் வாகட வெண்பா"** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்,

(பெ. சுரேஷ்குமார்)

நாள்: - -2007
இடம்: சென்னை-5.

உள்ளடக்கம்

பக்கம்

பதிப்புரை XXX

அகத்திய நாயனார் வாகட வெண்பா 1-35

பின்னிணைப்பு

1.பாடல் முதற்குறிப்பகராதி 36-41

2. சொல்லடைவு 42-52

3.துணைநூற்பட்டியல் 53-55

நன்றியுரை

என்னை ஈன்று புறம்தந்த என்தாய் - தந்தையை வணங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடையேனும் கரைசேர வேண்டும் என்னும் நோக்கோடு சென்னைப் பல்கலைக்கழகத்தில் பயில எனக்கு வாய்ப்பினை வழங்கிய முன்னாள் தமிழ்மொழித்துறைத்தலைவர் அகராதிக் கலை வித்தகர் பேராசிரியப் பெருந்தகை **வ.ஜெயதேவன் அய்யா** அவர்களுக்கும் சுவடியியல் துறையில் சுவடி எப்படி பதிப்பது, எப்படிச் சுவடியைக் கையாளுவது என்பன முதலான அனைத்துத் தகவல்களையும் வழங்கிய தமிழ் இலக்கியத் துறைத்தலைவர் பேராசிரியர் **வீ. அரசு** அய்யா அவர்களுக்கும் சுவடியைப் படிப்பதற்கும், பதிப்பிப்பதற்குமான எழுத்துக்களைக் கற்றுக் கொடுத்து நெறியாளராகவும் இருந்து என்னை நெறிப்படுத்திய **முனைவர் ய.மணிகண்டன்** அய்யா அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

சுவடிப்பதிப்பில் எனக்கு "அகத்திய நாயனார் வாக்கிய வாகட வெண்பா" என்னும் சுவடியைக்

கொடுத்துதவிய சென்னைப் பல்கலைக்கழக அரசினர் கீழ்திசைச் சுவடி நூலகக் காப்பாளர் **சௌந்தரபாண்டியன்** அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

பசிநோக்காது கண் துஞ்சாது எந்நேரமும் என் கல்வி வளர்ச்சி பற்றியே இடைவிடாது சிந்தனை செய்து கொண்டு இருக்கும் என் உயிரினும் மேலான, அண்ணன்கள், அண்ணிகளான **குமார் - குப்பு, தணிகாசலம் - சந்திரலேகா, ரஜினி- அமுதா,** அக்கா **சிவகாமி - சங்கர்** ஆகியோர்களுக்கு நன்றி கூற வார்த்தைகள் இல்லை. எனவே, இவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

சுவடியியல் பட்டய வகுப்பில் சேருமாறு என்னை ஆற்றுப்படுத்தியதோடு இந்நூல் உருவாக்கத்திற்குப் பல உதவிகளைச் செய்த முனைவர்பட்ட ஆய்வாளர் அ.சதீஷ் அவர்களுக்கு என்றென்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் உருவாக்கத்திற்குப் பல்லாற்றானும் உதவிய என்கெழுதக நண்பர்களான இரா. அன்பழகன் எம்.ஏ.பி.எட், ஜெ. பஞ்சாட்சரம், வ. சிவப்பிரகாசம், செ.

செல்வம் ஆகியோருக்கும் மற்றும் என் விடுதி அறை எண் 7ஐச் சேர்ந்த நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறப்பான முறையில் உருவாக்கிக் கொடுத்த டுடே **கிராஃபிக்ஸ்** நிறுவனத்திற்கும் என் நன்றியை உரித்தாக்கி மகிழ்கிறேன்.

பெ. சுரேஷ்குமார் எம்.ஏ.,

பதிப்புரை

'அகத்திய நாயனார் வாகட வெண்பா' எனும் தலைப்பிலான இப்பதிப்பாக்க முயற்சி பற்றியும் பதிப்பின் சிறப்பியல்புகள் பற்றியும் (ஆசிரியர், காலம், யாப்பு,நூல்நுவல் பொருள் முதலான)நூலின் சிறப்பியல்புகள் பற்றியும் எடுத்துரைப்பதற்கு முன் சுவடி நெறிமுறை, எழுத்து அமைப்பு, இவற்றைப் பாதுகாத்தல் மற்றும் சுவடி அச்சாக்கம் பெறல், இவற்றின் முன்னோடி போன்ற சுவடி சார்ந்த செய்திகளை முதற்கண் பருந்துப்பார்வையில் சுருக்கமாகக் கூறலாம் என்று கருதுகிறேன்

சுவடியும் நெறிமுறையும்

சுவடியின் நெறிமுறைகளை இரண்டு வகையாகப் பகுத்து காணலாம். அவை 1. எழுத்து முறை 2. பாதுகாத்தல் .

1. எழுத்துமுறை

சுவடிகளில் நான்கு வகையான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 1. பழைய எழுத்து வடிவம்;

2. கையெழுத்து வேறுபாடு, கிரந்த எழுத்து கலந்திருத்தல் என இரண்டுவகை எழுத்துமுறை உள்ளது.

1. பழைய எழுத்து வடிவம்

சுவடிகளில் உள்ள பழைய எழுத்து வடிவங்களில் எழுத்துகளில் குறில் நெடில் (எ,ஏ) வேறுபாடும், மெய்யெழுத்துக்களில் புள்ளிவைத்து எழுதும் வழக்கமில்லை. ஆனால் தொல்காப்பியர் காலத்தில் புள்ளிவைத்து எழுதியற்கான சான்றுகள் உள்ளன.

(எ.கா)

"உட்பெறு புள்ளி யுருவா கும்பே"

"மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்"1.

போன்ற நூற்பாக்கள் ஒலையில் மெய்யெழுத்துக்களில் புள்ளியிட்டு எழுதும் வழக்கத்தைக் கூறுவதனை காணலாம். "கி.பி. 9ஆம் நூற்றாண்டுவரை புள்ளியின்றி எழுதும் நிலை உருவாகியது என்று தென்னிந்திய கோயிற்சாசனம் என்னும் நூலில் த.ந. சுப்பிரமணியன் கூறுகிறார்."

---

1. தொல்.எழுத்து -நூன்மரபு -14,15. பக்-16

2. கையெழுத்து வேறுபாடு

சுவடிகளில் எழுதப்பட்ட எழுத்துக்களில் சில கையெழுத்து தெளிவு இல்லாமல் அய்யம் தருவதாக இருக்கும். கையெழுத்துத் தெளிவின்மையால் ஏற்படும் அய்யங்களை யூகத்தாலும், இடத்தாலும், பொருள் பொருத்தத்தாலும் நீக்கிக் கொள்ளலாம். அய்யத்தை ஏற்படுத்தும் ஒரு எழுத்து சுவடியில் பல இடங்களில் ஒரே மாதிரியாக இருக்கும். அவ்வாறு இருக்கும் போது சொல்லின் பொருத்ததால் அவ்வெழுத்தைப் புரிந்து கொள்ளலாம். சுவடியை முழுமையாக படிஎடுத்தபிறகு கையெழுத்து முறைய நன்கு புரிந்து கொள்ள முடியும். சுவடியைப் படிஎடுத்து எழுதி முடித்தபிறகு அவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் தூய வடிவம் பெறும்.

3. கிரந்த எழுத்து

கி.பி. 7ஆம் நூற்றாண்டுகளுக்கு பிறகு தமிழ்மொழியில் வடமொழியின் தாக்கம் அதிகமாக இருந்தது. இக்காரணத்தால் கிரந்த எழுத்துக்கள் அதிக அளவில் தமிழில் கலக்க தொடங்கின. ஏற்கனவே சொல்லப்பட்ட பழைய எழுத்து வடிவான புள்ளி இட்டு எழுதும் வழக்கம் கிரந்த எழுத்துமுறைகளையும் சுவடியில் புகுத்தினர்.

பாதுகாப்பு

ஓலையில் எழுதிய எழுத்துக்கள் ஓலையின் நிறத்திலேயே இருக்கும். அவை தெளிவாக தெரிவதற்கு மஞ்சள், இலைச்சாறு. கரிய மை வகை இவற்றில் ஒன்றைத் தேய்ப்பது மரபாக இருந்து வந்தது. இவையே பூச்சிக் கொல்லியாகவும் இருந்தன. இவற்றைப் பாதுகாக்க வேப்பிலை, வசம்பு ஆகியவற்றை பயன்படுத்தினர். மேலும் "சமையல் அறையில் புகைபடியுமாறு சுவடிகளைத் தொங்கவிட்டு வைத்துப் பாதுகாத்து வந்தனர். புகை படிவதால் பூச்சிகள் இறப்பதோடு எழுத்துகளும் நன்றாகத் தெரியும்"2. என்று அரசினர் சுவடி நூலக அறிக்கை கூறுவதாக பூ. சுப்பிரமணியன் கூறுகிறார். பழைய ஓலைகளில் உள்ளவற்றைத் தாள்களில் பெயர்த்து எழுதி வைத்துப் பாதுகாத்தனர். இவ்வறு எழுதிப் பாதுகாப்பது மூலத்தை பாதுகாக்க முடியாமல் போகும். எனவே, இதனைப் புகைப்படம் எடுத்து வைத்து மூலத்தையும் பாதுகாத்தனர்.

2.சுவடியியல்-பூ சுப்பிரமணியம்-பக்- 191.

மேலும், மூலச் சுவடியைப் பாதுகாக்க 'சிஃபான்' என்னும் மெல்லிய துணியைத் தாள்களின் மீது ஒட்டி வைத்துப் பாதுகாப்பது

(மெண்டிங்) தாள் சுவடிகளைப் பாதுகாக்கும் முறையாக இருந்து வந்தன" என்று பூ. சுப்பிரமணி கூறுகிறார்.

அச்சுப் பதிப்பு

ஓலை, பானைஓடு, செப்பேடு போன்றவற்றில் எழுதிக் கோயில்களிலும் மடங்களிலும் முடங்கிக் கிடந்த தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஆங்கிலேயர்களின் வருகையால் நூல்வடிவம் பெற்றன. அவ்வகையில் இந்தியாவில் கி.பி. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய பாதிரிமார்கள் அச்சுப்பொறியை அறிமுகம் செய்தனர். இவற்றின் மூலம் தம் மதத்தைப் பரப்பும் வண்ணம் நூல்களைப் பதிப்பித்தனர்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள தரங்கம்பாடியில் 1712இல் அச்சுக்கூடம் நிறுவி நூல்களை அச்சிட்டு வெளியிட்டனர். இக்காலங்களில் ஓலைச் சுவடிகளில்

உள்ள செய்திகள் இலக்கியமாயினும், இலக்கண மாயினும் (அல்லது) சோதிடம், ஆவணம் போன்ற பிற

பொருள்களாயிலும் வடிவில் ஒன்று போலவே எழுதப்பட்ட அமைப்பைக் காட்டுவன. செய்யுள்நூல் என்பதால் யாப்பு வடிவுடன் அச்சுவடிவம் காணப்படுவதில்லை அல்லது ஆவணம் என்பதால் முறையான வடிவைக் காட்டுவது ல்லை. பாட்டாயினும் உரையாயினும் அல்லது குறிப்பாயினும் எல்லாம் ஒன்று போலவே எழுதப்பட்டிருக்கும். இவற்றைப் பதிப்பித்து வெளியிடும்போது சுவடிகளில் காணுமாறே அச்சிட்டால் அவை அழகாக இருக்குமா? கருத்தை உரிய வகையில் உரிய உணர்வுடன் ஊட்டுமா? என்பது அய்யத்திற்குரியதே. எனவே, இலக்கண மரபு, மொழிமரபு, பொருளுணர்வு இவற்றை நுணுகிப்பார்த்து ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டும் என்று பதிப்புப் பணியில் நம் முன்னோர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டனர்.

பதிப்பு வரலாறு

ஆங்கிலேயர்களின் அச்சாக்க முயற்சிகளைத் தொடர்ந்து தமிழ்ச் சான்றோர் பலரும் ஓலைச் சுவடிகளில் இருந்த இலக்கண இலக்கியங்களைப் பதிப்பிக்கத் தலைப்பட்டனர். கிறிஸ்துவப் பாதிரிமார்களின் பதிப்பு பணிகளைப் பின்பற்றி

"இராமனுசக் கவிராயர், ஆறுமுக நாவலர், விசாகப்பெருமாளையர், தாமோதரம்பிள்ளை, கேளமளேசரபேட்டை. இராசகோபாலபிள்ளை, எழும்பூர் வேங்கடாசல முதலியார், சபாபதி முதலியார், உ.வே.சாமிநாத அய்யர் முதலானோர்"3. தமிழ்ச் சுவடிகளை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பதிப்பித்தனர். அவ்வாறு பதிப்பிக்கும் வேளையில் பண்டைய சுவடியில் இருந்தவாறே பாடல் எது? உரை எது? என்ற வேவறுபாட்டை அறிய முடியாத வகையில்ப்பல நூல்கள் பதிப்பிக்கப் பெற்றன. இவ்வகையான பதிப்பாக்க முயற்சியில் பல புதிய முயற்சிகளை உருவாக்கிய உ.வே. சாமிநாதையர் ஒரு நூலை பதிப்பிக்கும்போது அந்நூலுக்கான முகவுரை, பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, ஆய்வுக் குறிப்புகள் மேற்கோள் அகராதி, அரும்பத அகராதி ஆகிய பதிப்பு முறைகளில் பதிப்பித்தார்.

தமிழ் பதிப்பு முறையில் செம்மையைப் புகுத்தித் தரமான பதிப்பை உருவாக்கி உலகிற்கு அறிமுகம் செய்தவர் உ.வே.சாமிநாத அய்யர் ஆவார்.

3.மேலது பக்கம்-276.

பதிப்பு முன்னோடிகள்

"கி.பி. 1812இல் சுவடியில் இருந்த திருக்குறளின் அறத்துப் பாலினை எஃப் டபிள்யூ எல்லீஸ் என்பவர் பதிப்பித்து வெளியிட்டுள்ளார் என்பதனை அறிகிறோம். இவரைத் தொடர்ந்து "வீரமாமுனிவர்" எழுதிய சதுரகராதியின் பெயர், தொகை, தொடை, அகராதிப் பகுதிகளைச் சென்னைக் கல்விச் சங்கத்தின் மூலம் பதிப்பித்தனர்.

கி.பி. 1836இல் சென்னைக் கோட்டை கல்லூரிக் கல்விச் சங்கத்தின் சார்பில் புதுவை நயனப்ப முதலியார் தஞ்சைவாணன் கோவை, நேமிநாதம் மூலம் ஆகியவற்றை முழுமையாகப் பதிப்பித்தனர். 1838இல் திருத்தணிகைச் சரவணப் பெருமாளையர் திருக்குறளைச் சிறந்த உரையுடன் முறையாக பதிப்பித்தார்".[4]

சுவடிப் பதிப்பைப் பலர் மேற்கொண்டாலும் பதிப்பு பணியை ஒரு கலையாகக் கருதி அக்கலையின் நுணுக்கங்களைத் தங்கள் அனுபவத்தின் மூலம் பிறருக்கு எடுத்துக் கூறி வழிகாட்டியுள்ளோர் மிகச்

4. மேலது பக்கம் 213-216

சிலரே. அவர்களில் சி.வை. தாமோதரப்பிள்ளை, உ.வே. சாமிநாத அய்யர், எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோரின் பதிப்புரைகளே இங்கு பதிப்பு வழிகாட்டிகளாகச் சுட்டப்படுகின்றன.

"சங்க இலக்கியப் பதிப்பை முதன் முதலில் மேற்கொண்ட பெருமையுடையவராக சி.வை. தாமோரப்பிள்ளை திகழ்றார் (கலித்தொகை 1887) சுவடிப் பதிப்பாக மட்டும் எழுபத்து நான்கு நூல்களைப் பதிப்பித்த பெருமையுடையவர். உ.வே.சாமிநாத அய்யர் பதிப்பு முறையில் புதிய பல திருத்தங்களை மேற்கொண்ட பெருமைக்குரியவர் வையாபுரிப் பிள்ளை". [5]

இம்மூவரின் அனுபவங்கள் பதிப்புப் பணியில் பல பதிப்பாளருக்கு உறுதுணையாக அமைந்தன.

நூல் பெயர்க்காரணம்

"அகத்தியர் வாக்கியம் வாகட வெண்பா" என்பது இந்நூலின் பெயர். அகத்தியர் கூறிய வாகட வெண்பா என்பது பொருள்". வாகடம் என்பதற்கு வைத்திய நூல்

5 மேலது பக்கம் 216

(Tamil Lexecon Vol-VI University of Madras) என்று பொருள்".[6] இந்நூல் 'வெண்பா' என்ற யாப்பு வடிவத்தால் ஆனது. யாப்பின் சிறப்புக் கருதிச் சில நூல்கள் அந்நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள யாப்பு வடிவத்தால் அழைக்கப்படுவதுண்டு. இவற்றில் வெண்பா குறிப்பிடத்தக்க ஒன்று. "நளவெண்பா, புறப்பொருள் வெண்பாமாலை" போன்ற நூல்களின் பெயர்கள் வெண்பாவின் சிறப்புக் கருதி அந்நூலுக்கு வைக்கப்பட்டவைகளாகும். யாப்பின் சிறப்பு கருதி வெண்பா என்ற சொல் பின்னொட்டாகச் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே, இந்நூலுக்கு அகத்தியரால் கூறப்பட்ட வெண்பா என்ற யாப்பு வடிவத்தாலான வைத்திய நூல் என்று பொருள்.

ஆசிரியர் பெயர் : அகத்தியர்

தமிழ் இலக்கிய - இலக்கணங்களில் அகத்தியரை முதலாக வைத்துத் தொடங்கும் வழக்கம் இருந்து வருகிறது எனலாம். சித்தாந்த நெறி - வீடு பேற்றிற்கு நேர்வழி என உபமன்னியன், அகத்தியன் முதலிய உயர்ந்தோரெல்லாம் வாயு சங்கீதை, சிவகீதை முதலியவற்றை வரித்தோதினர் என்று சிவஞான

---

6. Tamil Lexcon vol-VI page-3573

சுவாமிகள் சித்தர் உரையில் கூறியதாக மு. அருணாசலம் கூறுகிறார்.

அகத்தியர் ஒருவர்தான் இருந்தார் என்றும் அவரால் பலநூல் எழுதப்பெற்றன என்றும் கூறமுடியாது. ஏனெனில் போகம், ஞானம், ரசவாதம், வைத்தியம், காயகற்பம், காலம், பூசை, தீட்சை, பஞ்சபட்சி, சாஸ்திரம், ஆருடம், வாகடம் முதலான எல்லாத் துறைக்ளிலும் அகத்தியர் பெயரால் நூல்கள் வழங்கி வருகின்றன. இவற்றைச் செய்தவர்கள் பலர். ஒருவரல்லர். காலமும் ஒரே காலமல்ல; வெவ்வேறு காலம். அகத்தியர் பெயர் இருந்தால் நூலுக்குச் சிறப்பு என்று கருதிப் பல காலத்தில் பலர் செய்த நூலுக்கு அகத்தியர் செய்த நூல் என்றே பெயரிட்டிருக்கிறார்கள். இவ்வாறு உள்ள நூல்கள் இன்று 200க்கும் மேல் உள்ளன என்று கூறுகிறார்கள். அகத்தியரைப் பற்றி தமிழ்ச் சான்றோரின் கருத்தைக் காண்போம்.

மு. அருணாச்சலம் அவர்கள் அகத்தியரைப்பற்றிக் கூறும்போது "முதல், இடைச் சங்கங்களில் இருந்த அகத்தியர் முத்தமிழ் இலக்கணம் செய்தார். 8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவாலய முனிவருக்குத் தேவாரத்திரட்டு திரட்டிக் கொடுத்தவர் ஒருவர்.

முருகன் துதியாக ஆறெழுத்து அந்தாதி எனும் ஓர் அந்தரிதியை எழுதியவர் ஒருவர், என அகத்தியரைக் குறித்துப் பேசப்படுகின்றது. தென்பொதியில் வாழ்ந்த இவர்கள் அனைவரும் ஒருவரே அல்லர். பல முனிவர் பல காலங்களில் வாழ்ந்திருந்தார்கள். பிற்காலத்தில் அவர்கள் அனைவரையும் அகத்தியர் என்றே மக்கள் கூறத் தலைப்பட்டனர்”[7]. என்கிறார்.

மது ச. விமலானந்தன் அவர்கள் குறிப்பிடும்போது தெய்வநிலை வரை தமிழ் மக்களால் உயர்த்தப்பட்ட அகத்தியர் தமிழ்நாட்டில் இருந்ததில்லை. புலவர் புனைந்த பெருங்கற்பனையே (A huge fred perpetrated by the so called Tamil pandits) என்பர்.

இல்லாத ஒன்றைப் பண்டைப் புலவர்கள் தொடங்கி பிரதிவரை அனைவரும் ஒத்துவரா? என்று அகத்தியர் இருந்ததற்கான இலக்கிய சான்றை தருகிறார்.

“தென்னவற் பெயரிய துன்னழுந் துப்பில்”

“தென்முது கடவுள்” (மதுரைக்காஞ்சி 40-41)

“பொதியில் முனிவன் புரைவரைகீழ்” (பரிபாடல் -11)

7. 16ஆம் நூற்றாண்டின் இ.வரலாறு பக்கம்-193

"மாதவ முனிவன் மலைவளங் கொண்டு"

(சிலம்பு அடை 14)

"அமரமுனிவன் அகத்தியன்" (மணிமேகலை)

"கன்னித்தமிழ்" (யாப்பருங்கலக்காரிகை)

இவை போன்று இன்னும் ஏராளமான இலக்கியங்கள் அகத்தியர் இருந்ததற்கான சான்றுகளை எடுத்து இயம்புகின்றன. இங்ஙனம் வழிவழியாக எல்லோரும் போற்றும் வண்ணம் அமையும் அகத்தியர் கற்பனை என்பது பொருந்தாது "தமிழெனும் அளப்பரும் கலதி தந்தவன்" "தழற்பொலி வழிக் கடவுள் தந்ததமிழ் தந்தான்" என தமிழ் தந்தவரே அகத்தியர்தாம் என மக்கள் ஒத்துவரேல் அதற்கு பெருமைக்குரிய இவரை கற்பனை என்பது ஏற்பதற்கில்லை.

அகத்தியர் பலர் இருந்திருக்கலாம். ஆனால், தமிழ் அகத்தியர் பொதிகை மலையில் சங்கம் ஒன்று நிறுவித் தமிழ் ஆய்ந்தவர் தென்தமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன் தமிழ் சங்கம் என்கிறார் கம்பர். சீதையை தேடச் செல்லும் வானரங்களிடம் தென்பொதிகை

மலையில் அகத்தியப் பெரு முனைவரின் தமிழ்ச் சங்கம் உள்ளது. அங்கு செல்லின் நீங்கள் தமிழ்ச் சுவையினை நுகர்ந்து உங்களை மறந்து அங்கேயே தங்கிவிட நேரும். சீதையைத் தேடும் உங்கள் குறிக்கோள் தடைபெறும் எனச் சுக்கீரவன் சாற்றுவதாக வால்மீகி ராமாயணம் (கிட்கிந்தகாண்டம்) கூறுகிறது. எனவே புனையுரைகளையும், பொய்யுரைகளையும் தள்ளி தமிழ் முதல் நூல் தந்த அகத்தியரைக் போற்றுவோம்"[8] என்று கூறுகிறார்.

அகத்தியர் தோத்திரக்கொத்து என்னும் நூலில் வித்துவான் அம்பை இரா. சங்கரனார் அவர்கள் அகத்தியரைப் பற்றிக் குறிப்பிடும்போது "சிறந்த முனிவர்கள் இறைவனிடத்துப் பேரன்புக் கொண்டவர். "நமைநிகர் ஒருத்த உள்ளான் அவன் நல்ல தமிழ் முனியாம் அகத்தியனே" என்று இறைவனே போற்றத்தக்க நிலையில் பெருமை கொண்டவர், இவ்வுலகத்தில் தமிழைப் பரப்பிப் பலதமிழ் நூல்களையும் எழுதியவர், தமிழாசிரியராக உலகத்துக்கே முதலாசிரியரென இருந்தவர்.

8. இலக்கியவரலாறு-மது.ச.விமலானந்தம்-பக்-29

"பொதிகை மலையை இடமாகக் கொண்டவர்" என்பன அய்யத்திற்கு இடமின்றித் தெரிகின்றது இவர் பிறந்த வாழ்ந்த காலம் அய்யத்துக்குரியது"[9]. என்கிறார்.

தமிழ் மருத்துவ முறையை வகுத்த பதினென் சித்தர்களுள் தலையாயவர் அகத்தியர். இவருக்கு இப்பெயர் மட்டுமன்றி.

அகத்தீசர், குடமுனி, கும்பமுனி, குருமுனி ஆகிய மாமுனிவன், குறுமுனி, தமிழ்முனை பொதிகை நாதன், பொதிகை முனி என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு என்பதைச் சுவடி நூல்களிலிருந்து அறிய முடிகிறது. மேலும் இவருக்குத் தட்சிணாமூர்த்தி என்ற பெயரும் உண்டு என்பதைச் சில நூல்களின் தலைப்பிலும், இறுதியிலும், அமைந்துவரும் குறிப்பில் இருந்து அறியமுடிகிறது.

சித்தர் மரபு

"சித்தர் என்ற சொல்லுக்குச் 'சித்தி பெற்றவர்கள்' என்றும், பேறு பெற்றவர் வீட்டின்பம் அடைந்தவர் எனப் பல நிலைகளிலும் பொருள்

9. அகத்திய தோத்திரகொத்து பக்-6

கொள்ளப்படுகின்றது"[10]. சித்தன் வாழ்வு மூன்று நெறியுடையன என்று அவ்வையார் குறிப்பிடுகிறார். எல்லாம் வல்ல சித்தனான சிவபெருமான் திருவிளையாடல் புரிகிறார் என்று புராணங்கள் கூறுகின்றன.

கடவுளைக் காண முயல்கின்றவர் பக்தர், கண்டு தெளிந்தவர் சித்தர் என்று தேவாரம் வேறுபடுத்திக் கூறுகிறது.

சித்தர்கள் தங்கள் தலைகளை ஞானமார்க்கம் என்ற ஆகாச வெளியில் நீட்டிக் கொண்டிருந்தாலும், தங்கள் கால்களைப் பூமியிலேயே பதித்திருந்தார்கள். தாங்கள் பெற்ற ஞானத்தைத் தங்கள் வாழ்க்கையை உலக மக்களுக்கு உய்விக்கப் பயன்படுத்தினார்கள். உலகோரும் பெற வேண்டும் என்று ஆற்றுப் படுத்தியவர்கள் சித்தர்கள்.

சித்தர்களின் காலம்

சித்தர்களின் காலத்தைப் பலரும் பலவாராகக் கூறுகின்றனர். அவர்களுள் தெ.பொ.மீ. 15ஆம் நூற்றாண்டு என்றும் மு. அருணாச்சலம் சதாசிவப்

---

10. வாழ்வியல் கலைஞ்சியம். பக்-2011

பண்டாரத்தார் 5, 6ஆம் நூற்றாண்டு என்றும் நீலகண்ட஌ சாஸ்திரி கால்டுவெல் போன்றோர் 16, 17ஆம் நூற்றாண்டு என்று சித்தரின் காலத்தைக் குறிப்பிடுகிறார்கள்.

ஆசிரியர் - நூல் காலம்

தமிழ் இலக்கண இலக்கிய மரபில் மிக நீண்ட நெடிய வரலாற்றை உடைய அகத்தியர் மரபில், இந்நூலாசிரியராகிய அகத்தியர் எக்காலத்தில் வருகின்றார் என்பதனை அறுதியிட்டுக் கூற இயலாது. இருப்பினும்,

"வாகட வெண்பா எழுதி நிறைந்தது

முற்றும்

பதிணென் பேர்கள் துணை

ராமசாமிப் பிள்ளை கையட்சரம்

நீடூழிகாலம் வாழ்க

குரு ரட்சிக்க"

என இந்நூலின் இறுதிப்பகுதியில் வருவதாலும் நூலின் முதற்பகுதியில் 18 சித்தர்களை வாழ்த்தி,

"ஆரியனூல் வாகடத்தி னுள்பொருளை ஆராய்ந்து
சீருயர்ந்த செந்தமிழால் செப்பவே - கூரியதி
னுள்ளநி தானமதை ஓத அருள்பெருகும்
வள்ளலே யென்மனத்தில் வாழ்"

பாடியுள்ளதும், ஆசிரியர் கூற ராமசாமிப்பிள்ளை எழுதினார் என்பதும் "பதினென் சித்தர்களைப் போற்றி யிருப்பதால்" பதினென் சித்தர் மரபில் இந்நூலாசிரியரை அடக்க முடியாது என்பதும், பதினென் சித்தர் மரபு தோன்றிய காலத்திற்குப் பிறகே ஆசிரியர் வாழ்ந்திருக்க வேண்டும் என்பதும் தெளிவு இருப்பினும் அவருடைய காலத்தை அறுதியிட்டு அறிய முடியவில்லை.

பதிப்புமூலம்

இப்பதிப்பு சென்னை அரசினர் கீழ்திசைச்சுவடி நூலகத்தில் உள்ள எண். 2496 என்ற ஓலைச் சுவடியைப் பார்த்துக் கையெழுத்துப் பிரதியால் பெயர்த்தெழுதப்பட்ட எண். ஆர் 5303 என்ற தாள் சுவடியையும் இப்பதிப்பிற்கு மூலமாக எடுத்துக் கொண்டுள்ளேன். இந்த மூலச் சுவடியையும் தாள் சுவடியையும் ஒப்பிட்டு இப்பதிப்பை உருவாக்கு கின்றேன்.

பதிப்புச் சிக்கல்

இப்பதிப்பை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்கள் சில உள்ளன.

1. வெண்பாவில் சில இடங்களில் யாப்பு பிறழ்தல்
2. ஒரு சில பாடல்களில் பொழிப்பு மோனையின்மை
3. ஒரு சில பாடல்களில் அடி எதுகை
4. சொல் ஈற்றில் ஒற்றெழுத்து வந்த பிறகும் உடம்படு மெய் வருதல்
5. ள, ல, ண, ன வேறுபாடு இன்மை.
6. ஒரு சில பாடல்களில் நான்கு சீரான்மிக்க ஐஞ்சீரடிகள் வருதல்.
7. ஈற்றடி நாற்சீரான் வருதல்
8. தமிழ் மரபில் (ல்,ள்) ஒற்றை அடுத்து அதன் இன ஒற்றான (ட்) அன்றி வேறு வராது. ஆனால் (பாடல் எண் -23). இனஒற்று இல்லாத (ச்) வந்துள்ளது தமிழ் மரபிற்கேற்ப அவற்றை நீக்கி பதிப்பித்துள்ளேன்.

9.ஒருசில பாடல்களில் ஒரு அடியேயில்லை.

(எ.கா)

ஓடுவளை நாகணமும் ஒக்கவே தான்கூட்டி

நீடு நிழலதிலே நீயுவர்த்திக் - கூடவே

சூரணமாய்ப் பண்ணியிதைத் துய்க்க வெறுகடியில்

.... (பா. 109)

இப்பாடலின் இறுதி அடியும் அடுத்த பாடலான (பா. 110)இல் முதலடியும் இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கன. இவற்றில் புணர்ச்சியில் வரும் சந்தி, உடம்படுமெய், ன-ண, ல-ள, கார வேறுபாடுகள் போன்றவை பாடலின் யாப்பு, பொருள் ஆகியவற்றிற்குத் தக்க மாற்றம் செய்யப்பட்டுள்ளன. தளைபிறழும் இடம் திருத்தம் ஏதுமின்றி (*) என்ற குறியீடும், மோனை, எதுகைகள், அற்ற இடத்தினை (+) என்ற குறியீடும் இடப்பட்டுள்ளது. இதனை,

(எ.கா)

"கூறுடைய பாவட்டை கொண்ட சிறுமயின்வேர்

வீறுடை வேலிப் பருத்திவேர்+ - காறுகின்ற

நல்மிளகைக் கூட்டிநல் லாக்காய மிஷடுட்சென்ம

மில்லை யருஞ்சுரங்கள் செப்பு" (பா. 4)

இப்பாடலில் இரண்டாம் அடியில் எதுகை மோனையில்லை என்பதை இணங்காட்டப்பட்டுள்ளன.

பாடல் எண்ணிக்கை

இந்நூலில் பாடல்களின் மொத்த எண்ணிக்கை 131 ஆகும். இவற்றில் கடவுள் வாழ்த்துப் பாடல் ஒன்று அது விநாயகரைப் பற்றியதாகும். 3 பதினென் சித்தர்கள் பற்றிய வாழ்த்துப் பாடல்களும் உள்ளன.

யாப்பமைதி

'வாகட வெண்பா' என்ற இந்நூற் பெயரை வைத்தே இந்நூல் பாடல்கள் வெண்பா யாப்பால் அமைந்தன என்பதை உணரமுடியும் கடவுள் வாழ்த்துப் பாடல் மட்டும் "நிலை மண்டில ஆசிரியப்பா"வால் அமைந்துள்ளது.

மற்ற பாடல்கள் அனைத்தும் நான்கடி கொண்ட "நேரிசை வெண்பா" என்ற பாவகையால் அமைந்துள்ளன. இவற்றில் பெரும்பான்மையும் இரண்டாமடி இறுதியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தான் வந்துள்ளன.

தொடை நலன்கள்

பெரும் பாடல்களில் நேரிசை வெண்பாவிற்கே உரிய பொழிப்பு மோனைத் தொடையும், அடியெதுகையும், தொடையும் பயின்று வந்துள்ளன.

(எ.கா)

“தானென்னும் வெள்ளுள்ளி தப்பாமலுப் பமிழற்றி
வேனென்னும் அக்கினியில் வேகவைத்த – தீனென்னும்
யிங்கு வுடனரைத்து யிந்தநீர் தான்குடிக்க
மங்குதர வாயுவில்லை மான்”

இப்பாடலில் பொழிப்புமோனை பயின்று வந்துள்ளதைக் காணலாம்.

அந்தாதித் தொடை

ஒரு செய்யுளின் இறுதி அசையோ, சீரோ, அடியோ, அடுத்த செய்யுளின் முதலில் வரத் தொடுப்பது அந்தாதி. இந்நூலில் பல பாடல்களில் அவற்றின் இறுதிச்சீர் அடுத்த பாடலின் முதல் சீராக வந்து அந்தாதித் தொடையால் அமைந்துள்ளன. வெண்பா யாப்பில் அந்தாதித் தொடை அமைந்த

பாடல்களைப் புனைந்திருப்பது மிகவும் சிறப்புக்குரிய ஒன்றாக அமைந்துள்ளது.

(எ.கா)

"சாய்கக்கும் படிகேளாய் தான்இரந்திப் புண்சூலை
மாய்க்கும் வயிற்றுவலி வாதகுட்டம் - போக்க
துண்ணீ ருலகத்தி லுய்யவே மானிடர்க்கு
பண்ணுபச்ச சூரணத்தைப் பாற்று" (பா. 55)

"பாற்றுங் கடைமருந்து பஞ்சகோ லம்விளங்கம்
சாற்றுகருஞ் சீரகமுந் தன்மோத - மேற்றபடி
யிட்டுப்பட்டைச் சூரணமு மிரண்டுபங்கு முன்கலந்து
தட்டிக்கொட் டித்தின்னத் தான்" (பா. 56)

ஆகிய இரண்டு பாடல்களிலும் அந்தாதித் தொடை அமைந்து உள்ளதைத் தெளிவாகக் காண முடிகின்றது.

தொடை விகற்பங்கள்

பொழிப்பு மோனை, அடியெதுகை தவிர, இணைமோனை, ஒரூஉ எதுகை, கூழைமோனை

முதலான தொடை விகற்பங்களும் பயின்று வந்துள்ளன.

நூல்நுவலும் செய்தி

"காடுகளிலும் மலைகளிலும் காலத்தைக் கழித்த பெரியோர்களாகிய சித்தர்கள் உயிர் வளர்க்கும் யோக நெறியுடன், மானுட உடலினைச் சார்ந்த தட்பவெப்ப நெறியுடன் மானுட உடலினைச் சார்ந்த தட்பவெப்ப மாறுபாடுகளையும் மூச்சோடு உட்சென்று உடலில் மறைந்து வளரும் நச்சுயிரணுக்களின் இயல்பினையுளம் வெளியுலகில் நிலவும் கொடிய கிருமிகளின் தாக்குதல்களையும் தேள், பாம்பு போன்ற நச்சுக்களால் மக்களுக்கு ஏற்படும் கொடுமைகளையும் உடலுறுப்புகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் நரம்பு நெகிழ்ச்சி, தசைப் பிறழ்ச்சி, எலும்பு முறிவு போன்ற குறைபாடுகளையும் தீர்க்கும் மருந்துகளை ஆராய்ந்து கண்டறிந்தனர். அவைகள் இயற்கைத் தாவரங்களின் இலை, பட்டை, வேர், விதை, கிழங்கு ஆகியவை பூமியின் விளைவாக நிற்கும் தாதுப் பொருள்களாகவும் அமைந்து பச்சிலை, சாறு, துகள், பற்பம், குழம்பு, தைலம் என்னும் இனங்களில் ஆக்கப்பெற்ற மருந்துகளாகிய வகை முறையுடன் சித்தர்களால்

பணியாளர்க்கு அளிக்கப்பெற்றுப் பயனளித்தன"[11]. இவ்வாறு சித்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டு தமிழ்நாட்டில் வளர்ந்து வந்த வைத்தியமாதலின் இம் மருத்துவ முறை "சித்த மருத்துவம்" என்னும் சிறப்பு பெயருடன் வளர்ச்சி பெற்றது.

நோய்கண்ட அளவில் உடனுக்குடன் அரிய முறையில் தயாரித்துக் கையாளப்பெற்ற மருத்துவ முறை "கைவைத்தியம்" என்னும் பெயரைப் பெற்றதுடன் குடும்பத்தில் முதியோர்களால் அனுபவமாகச் செய்தளிக்கப் பெற்றதால் பாட்டி வைத்தியம் எனவும் பெயர் பெற்றது. நோய் தீர்க்கும் மருந்துகளைத் தேடிக்கண்டு அவைகளைப் பக்குவ முறைகளால் மருந்துகளாக்கி மக்கட்களித்த செய்முறை நாட்டு வைத்தியம் என்று பெயர் பெற்றது.

மேற்கூறிய சித்த மருத்துவம் இருவகைப்படும். ஒன்று அகமருந்து, இரண்டு புற மருந்து என்பன. அகமருந்து என்பது உள்ளுக்குச் சாப்பிடுவது. புறமருந்து என்பது உடலின் மேல் பூசி உபயோகிப்பதும் ஆகும். மருந்து உடலில் உண்டாகும் நோய்களைத் தீர்ப்பதற்கு உதவுகின்றது என்பார்கள்.

11.சித்தர் சிந்தனை- பக்.46

இந்நூல் பல்வேறு நோய்களையும், அந்நோய்களைப் போக்கும் பல்வேறு மருத்துவ முறைகளையும், அவற்றிற்கு மருந்து தயாரிக்கும் முறைகளையும், மூலிகைப் பெயர்களையும் மிக விரிவாகப் பதிவு செய்துள்ளது. இந்நூலில் கூறப்படும் நோய்வகைகள் கீழ்வருமாறு:

1. தலைவலி நீரேற்றம் சுரம்
2. எரிவாதம்
3. உதரவாயு
4. நீரடைப்பு
5. அண்டவாதம்
6. அசீரணங்கிராணி
7. பித்தம்
8. குன்மவலி
9. விக்கல் சத்தி
10. அஷ்டகுன்மம்
11. எரிகுன்மம்
12. அசீரண சுரம்
13. சுவாச காசம்
14. வாய்வு கரைப்பன் விறகம்
15 மேகம் ஊக
16. காசமீளை பித்தம்
17. காசமீளை இரும்பல்

18. ரத்த மாற்றம்
19. காசமனோசிகம்
20. காசம்
21. இரும்பல்
22. எழுநாயகிரந்தி
23. ஈழை எலிகடி
24. பஞ்சு சுவாசகாசம்
25. சேத்துமத்தில் வரும்பிணி
26. சுவாச மீளை
27. சுரஞ் சுவாசம்
28. இரத்த பித்தம், மறோசிகம் அங்கி சுரதாகம்
29. குளிர் சுரம்
30. அசீரணம்
31. மந்தம்
32. விசம்
33. வாத கரைப்பன் குணம்
34. சேத்தும கரைப்பான் குணம்
35. தோஷ கரைப்பாபன் குணம்
36. அரிகரைப்பன் குணம்
37. அவிந்தவாகை
38. கரப்பான் வாகம்
39. மலசலம் அடைப்பு
40. கிரந்திப்புண், சூலைவயிற்றுவலி
41. கிசந்த கூட்டுச் சூலைக்கு

42. மகோதாத்துக்கு கிறாணி
43. கிறாணிக்கு
44. தேரைத் தோஷங்
45. பாண்டு இறாணி மூலம்
46. வெள்ளை நீர் கழிச்சல்
47. பெரும்பாட்டு
48. மருந்துவகை மூலம்
49. நீரடைப்பு, பெரும்பாட்டு
50. குன்மம்
51. மூலக்கிறாணி
52. இருமல்
53. அத்திசுரம்
54. வலிகுன்மம்
55. சோகை
56. காமாலை, பித்தம்
57. கெற்ப விற்புருத்தி
58. இரும்பல்
59. நீர் கடுப்பு
60. பெரும்பாட்டு
61. பேய்நாய்கடி
62. மூலப்பிரயியம்
63. பித்தமயல் பிரமை
64. வாயு
65. வாதசுறோணிதம்

66. கல்லடைப்பு
67. சூலை, சிரங்கு
68. அரையாப்பு
69. இரும்பல்
70. ரத்தமேகம்
71. எரிகுன்மம்
72. நீர்பீனிசம்
73. பித்தசுரம் சன்னி
74. அதிமாங்கிஷம் நீர்ச்சிறுப்பு
75. நீரழிவு
76. சுரம்மாந்தம் தோஷம்
77. பல்வலி

ஆகிய தலைப்புகளில் இந்நூல் அமைந்துள்ளது.

நூலின் சிறப்பு

1. நேரிசை வெண்பா யாப்பில் அமைந்துள்ளது.
2. வெண்பா யாப்பில் அந்தாதித் தொடையால் அமைந்திருப்பது.
3. பல்வேறு நோய்களையும் அவற்றைப் போக்கும் நாட்டு வைத்திய முறைமைகளையும் கூறியிருப்பது.
4. பல்வேறு நாட்டு மருத்துவத்துக்குரிய

மூலிகைகளின் பெயர்களையும் மருந்து செய்யும் முறைமைகளையும் விளக்கி இருப்பது போன்றவை இந்நூலின் சிறப்புகளாகும்.

5. இந்நூலில் ஒருசில வைத்திய முறைகளைப் பெண்களை நோக்கித்தேன்மொழியே, பாலமொழீயீர், மாதே போன்று விளித்து மருத்துவமுறை கூறுகிறார் ஆசிரியர்.

முடிவாக,

தமிழின் தொன்மையான - பழமையான மருந்துமுறையான, வைத்திய முறையான சித்த வைத்திய முறை நாட்டு வைத்திய முறை, ஆங்கில வைத்திய முறை முதலியவற்றில் நலிவடைந்து வருவது இன்று கண்கூடு. நாட்டு வைத்தியர்களும் அருகி வருகின்றனர். இச்சூழலில் இதுபோன்ற நாட்டு வைத்திய நூல்களைப் பதிப்பிப்பதும் அவற்றில் கூறப்பட்டுள்ள வைத்திய முறைமைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுதலும் நம்முடைய கடமையாகும்.

அகத்திய நாயனார் வாக்கியம் வாகட வெண்பா

தலைவலி நீரேற்றம் சுரத்துக்கு

வேக மாய்நெறி நேரும் வினைகளும்
தாக போகம் விடாத தழற்சியுஞ்
சோக வாரி யினால்வரு துன்பமும்
போக யானை முகற்றனைப் போற்றுவாம்.

பதினெண் பேர்கள் துணை

ஆரியனூல் வாகடத்தி னுள்பொருளை ஆராய்ந்து
சீருயர்ந்த செந்தமிழால் செப்பவவே - கூரியதி
னுள்ளநி தானமதை ஓத அருள்பெருகும்
வள்ளலே யென்மனத்தில் வாழ். 1

வாவெனவே செத்துமத்தில் வந்த இரந்தியமும்
போவென வேணிலிடப் போயிவிடும் - பாவினையாம்
வாக்கான்பீ னிசமு மற்றுஞ் சலம்போக
ஆக்கிறாணஞ் செய்வா யாற்றை 2

அரத்தைசத குப்பைசுக்கு ஆகும்நொச் சிக்கு
உரத்திழ(ள)க காச்சியுண்ண ஓடும்-வறுத்த
தலைவலிகள் நீரேற்றம் தங்கு சுரம் வந்தால்
குலைகுலைந்து போமெனவே கூறு. 3

கூறுடைய பாவட்டை கொண்ட சிறுமயின்வேர்
வீறுடைய வேலிப் பருத்திவேர்* காறுகின்ற
நல்மிளகைக் கூட்டிநல மாய்க்களயட் மிஷடுணசென்
மில்லை யருஞ்சுரங்கள் செப்பு. 4

எரிவாதத்துக்கு

செப்பமெனும் பேரிலந்தை சேர்ந்த யிலையரைத்து
ஒப்புடைய காடி உடன்கரைத்து - தப்பாமல்
மத்திட் டுடன்கடைந்து வந்தநுரை யைப்பூசச்
சற்று மெரிவாதமில்லை தான். 5

உதரவாயுவுக்கு

தானென்னும் வெள்ளுள்ளி தப்பாமலுப்பமிழற்றி*
வேனென்னும் அக்கினியில் வேகவைத்த - தீனென்னும்
யிங்கு வுடனரைத்து யிந்தநீர் தான்குடிக்க
மங்குதர வாயுவில்லை மான். 6

---

*தளைப்பிறழும் இடம்

நீரடைப்புக்கு

மானேகேள் நீரடைக்கல் வாழும் பசிழை(ல)யுடன்
தானேநற் கத்திரியின் தன்னிலையும் - பானையதி
யொக்கக் கஷாயமிட்டு ஊ...ம்வெங் காரமிட்டுண*
கக்கிக் கடலுடைக்குங் காண். 7

அண்டவாதத்துக்கு

காணும்பூ நாணல் கழச்சிக்கா யின்பருப்பும்
பூனுங்கொற் றானும்... போதவே- வேணுமெனப்
பண்ணீர் கசாயம் பருகப் பருகியபின்
விண்ணிவண்ட வாதம்போம் பார். 8

அசீரணங்கிராணிக்கு

....தியீற்கில் மேவுகரு வேப்பீர்க்கில்
முட்டுசுக்கு சீரகமும் மோதகமும் - தட்டியிட்டுக்
காய்ந்தநீர் கொள்ளக்கா ணீசீ ரணமும்
பாய்ந்த கிறாணியும்போம் பார். 9

பித்தத்துக்கு

பாரிசைந்த நெல்லி பரியதோர் கூவளையும்
சீரிசைந்த சீரகமும் சேர்ந்தசுக்கும் - வேரிசைந்த
சீற்ற முடன்பொரியுஞ் சேர்ந்து கசாயமிட்டுண*
பித்தம்விட் டுப் போமிதனைப் பேசு 10

குன்மவலிக்கு

பேசும் பிரண்டையுடன் பேரிசைந்த வேப்பலகு
மூசு புரசவித்து மோதகமும் - வாசிபெறக்
கொள்ளீர் கசாயமதில் குற்மவலி யுங்கிறுமி
விள்ளீர் விழுந்தேகு மிது. 11

மீதுவென்னும் மூககரட்டை வேரதனில் சுண்ணாம்பு
போததில் பொதிந்து புடமிட்டே - ஊதியுண்ண
விறகமொடு பீலிகையு மிறுகனி மந்தம்
பறைகப்வ பறந்துபோம் பண். 12

விக்கல் சத்திக்கு

பண்ணும் பருத்திவிரை பாரிலுள நெல்பொரியும்
யெண்ணுசிறு திப்பிலியும் யேலமுடன் - நண்ணுபோம்
சக்கரையுந் தேனுமிவை தன்னிலே பண்ணியுண்ண
விக்கச ததிபோகும் விரும்பு. 13

---

* தளைப்பிறழுமிடம்

பித்தத்துக்கு

விரும்புகின்ற சீரகமும் மேன்மையுள நெல்லும்
பொரும்புகின்ற சுக்குப் பொடிசரியாய் - நிரம்பிடவே*
சக்கரையுந் தேனும் துழாவிப்பெறு தியுண்ண
சொக்கரெழாவரு பித்தமுஞ் சாம்பும்.* 14

அஷ்ட குன்மத்துக்கு

சோம்புகின்ற மண்டூரம் சுத்திபொடி நாயுருவிச்
சாம்பல் மிளகுபொடி தன்னைசாரித் - தேம்பிடவே
யெட்டிகொன்று காயமிட்டி றக்கிக் கழங்சியுண்ண
அட்ட குன்மம் போமே குலைந்துடனே.* 15

அண்ட வாதத்துக்கு

அலையுங் கருவழகி லார்க்கபொடி செய்து
நிலையு மிளகுபொடி நேர்சரியாய் - மலையில்*
பெருங்காயம் கூட்டியுண்ண மாளுமண்ட வாதம்
வரும்பானை யோன்றதுவும் வாடும்.* 16

---

* தளைப்பிறழுமிடம்

எரிகுன்மத்துக்கு

வாடுகின்ற யிந்துவுக்கு பாலியிலைச்சாராம்
தேடுகின்ற காயமதில் சேர்யிதி - நாடுபுகழ்
சம்பி ரசகற்றில் தா னே.... லக்கியிடில்
வெம்பு மெரி குன்மம்போம் விரைந்து. 17

அசீரண சுரத்துக்கு

விரைந்த மிளகரைத்து வெந்நீ ருடன்கலந்து
அருந்த அசீரணங்க ளாறும் - வருந்துஞ்
சலதோஷம் சூலை சகலசுரங் கிறுமி
பிலனோடிப் போமே பெறு. 18

சுவாச காசத்துக்கு

பெறுவீர்பி றாய்சூரை பெரியசங்கு கூட்டி
மறுநீர்விட் டாவிதனை வாங்கிக் - குருநீரில்
திப்பிலியும் வெங்காரம் தேனும்விட மென்பொடியாய்
ஒப்பும்சு வாசங்காசம் ஓடும்.* 19

வாய்வு கரைப்பன் விறகத்துக்கு

ஓடுகின்ற சாரடையும் உப்பும் அரிதகியும்
வாடுகின்ற சுக்கும் வகைக்குடிநீர் - தேடி
மறுகக்காச் சிக்குடினீ வாயுகரைப் பன்விறகம்
எறுகுமை மகன்றே கும் பார். 20

---

* தளைப்பிறழுமிடம்

மேகம் ஊக

பாரீர்மே கம்யோக பண்புபே யன்பழற்றில்
சேரீரே சர்க்கரையுஞ் சீரகமும் - நாரீரே
உண்டக்கால் யேகாதோ உள்காச்ச லும்மேகம்
கண்டக்கால் பித்தமும்போம் காண். 21

காசமீளை பித்தத்துக்கு

காணீறா டாதோடை கண்டங்கரி துளசி
தூணீர்பிட் டிப்பிலியும் தூளிடீர் - நாணியிதில்
கொக்கொக்கென்னும் கொடுங்காச மீளையிவை
பொக்குப்பொக் கென்றேயேம் யோது. 22

காசமீளை யிருமலுக்கு

போத்தீறா டாதோடை போந்ததொரு முந்திரிக்கை
சேத்தீரே நற்குடிநீர் செய்திடுக - மாத்தீரே
அக்காயங் கூட்டி அருந்தீ ரறுந்தியபின்
உள்சாறு மாற்றபித்தம் ஓடும். 23

ரத்த மாற்றத்துக்கு

ஓடுகின்ற மாதளம்பூச் சாற்றிலுகந் தேநெய்பால்
கூட வதினின் கொழுந்தரைத்து - நாடிமிகப்
பார்த்துப் பிழிந்துபரி வாகமூக் கில்விடக்
கார்த்திரற்ற பித்தம்போம் கூறு. 24

காசமனோசிகம் காசத்துக்கு

கூறுகின்ற தாளீச பத்திரியுங் கூர்மிளகும்
தேறுகின்ற நாகப்பூத் திப்பிலியும் - வீறுகின்ற
கூகைநீ ரேலமுடன் கூடுமிவ் வங்கமிவை
பாகமாய் சூரணித்துப் பண். 25

காசத்துக்கு

பண்ணிய பின்காரம் பாகனுமாய்க் கூட்டி
யுண்ணக் கழஞ்சிதே னூட்டியே - திண்ணமுடன்
னாவிலிடக் காசம்போம் நன்னு மறோசிய
பூவினிடம் விட்டோடிப் போம். 26

இருமலுப்பிசஞ் சுவாசத்துக்கு

போமே கருநெல்லி போத்தரிய தான்றிசிங்கி
தாமே கொமட்டஞ் சடாமாஞ்சி - லாமே
திரிகடு கோடிதுப்பு தேக்குகண்டங் கத்திரியும்
சிறுகிடவே சூரணமாய்ச் செய். 27

எழுநாயகிரந்தி

செய்த மருந்தைச் செலுத்த விரும்பிக்கேள்
யெய்தயிஞ்சி சாறுதேனிட் டுண்ண - அபயமாக்
*குத்திக்குத் தியிருமும் கூட்டு பிசஞ்சுவாசம்
*தத்தித்தத் தியோடுந் தான். 28

எழுநாயகிரந்தி

தானே அடப்பவிரை தப்பாம லேகழஞ்சு
மானேவெந் நீரதினில் மத்தித்துண் - நானேசொல்
*யெழுநா யறுகிரந்தி யீழை எலிகடிநோய்
*விழுமோடுஞ் சொன்னேன்கேள். 29

ஈழை எலிகடிக்கு, யீளை சுவாசத்துக்கு

வேண்டும் பெருங்காயம் வேலிப் பருத்தியின்சார்
ஆண்டுசென்ற ஆமணக் கின்தேனை - பாண்டத்
தெரித்து வடித்துண்க யீளை சுவாசம்
விரண்டோடிப் போகும் வெறு(ரு)ண்டு 30

பஞ்சு சுவாச காசந்துக்கு

வெருண்டமிள கோர்மூன்று விரையழிசின் கொட்டையெட்டு
திரண்ட பொடிகழஞ்சி தேனிலுண் - மறுண்டுமுரிப்*
பட்டேனெ னச்சொல்லு பஞ்சசுவா சங்காசம்
கெட்டேன்கெட் டேனெனப்போங் கேள் 31

சேத்துமத்தில் வரும் பிணிக்கு

கேளுங்கை யாந்ததரைச் சாறுங் கிழற்கடுக்காய்
மீளும்நல் லெண்ணையதில் வெந்திறக்கி - நாளுமெண்ணி
தின்னீர் தினங்கழஞ்சி சேத்துமத்தில் வந்தபிணி
சொன்னேன்போற் தேன்மொழியே தூது 32

* தளைப்பிறழுமிடம்

சுவாசமீளை

தூதுவளை யின்பழச்சார் துய்யாவி நெய்பாலும்
தீதில்சத குப்பையிரு சீரகம் - மாதேகே
ளொக்க யெரித்துண்ண ஓங்கு சுவாசமீளை
யிக்கணமே பாறு மியம்பு. 33

சுரஞ் சுவாசத்துக்கு

பாரியநா ரத்தைப் பழச்சாறும் உப்பிலியும்
*தேறுதிப் பிலிமிளகு தேக்குடனே - மீறுசிங்கி
தேற்றா விரையரைத்து தேனுமதில் கூட்டியுண்க
மாற்றாய் சுரசுவாச மாறும். 34

ரத்தபித்தம் மறோசிகம் அஸ்திசுரதாகத்துக்கு

மாறுந் தொடைச்சாறும் வளறாவி நெய்பாலும்
தேறுந் திப்பிலியா னைத்திப்பிலியும் - கூறுங்
கொடுவே லிதன்னுடனே கூட்டியிவச் சாரம்
வடிவாக வேவேக வை. 35

வேகவைத்த நெய்யில் விரும்பியிரு நேரம்
பாகுவைத்து ணரத்த பித்த மாறும் - தேகாம்
வாத வறோசிகமும் அஸ்திசுரந் தாகம்பிந்
*தாதே யேகும் பிரிந்து. 36

* தளைப்பிறழுமிடம்

குளிர்சுரத்துக்கு

பிரிந்த யிளவெந்நீர் பின்முதிய(வ)ர் கூந்தல்
அரிந்து அதன்வேர ரைத்து - சிரந்துண்ண
சீறுசுர முங்குளிரும் தேன்மொழி யேதாகம்
கீறுடனே போமிதனைக் கேட்டு. 37

அசீரணத்துக்கு

கேட்டவெள்ளைக் காக்கணம்வேர் கேளாய்நீ நல்மிளகு
